# இயல்புக்கூட்டப்பொருட்கள்

1. இம்மாநகராட்சிக்கு சொந்தமான மார்ச் 2018-ல் 9 ஆண்டுகள் முடிவுற்ற பெதஸ்தா வணிக வளாகத்தில் ஏலம் போகாத கடைகளுக்கு தொடர்ச்சியாக மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 01.08.2019 அன்று இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஆணையர் அவர்களின் முன்னிலையில் பிரிக்கப்பட்டது. பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை கீழ்கண்டவாறு அங்கீகாரத்திற்கு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை |
|---|---|---|
| | **பெதஸ்தா வணிக வளாக கடை எண்.27** | |
| 01 | திரு.சண்முக சரவணன்<br>மேலாண்மை இயக்குநர்<br>நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிட்<br>41-B சிட்கோ இண்டஸ்டியல் எஸ்டேட்<br>அம்பத்துார், சென்னை 98 | 5000/- |
| | **பெதஸ்தா வணிக வளாக கடை எண்.28** | |
| 02 | திரு.சண்முக சரவணன்<br>மேலாண்மை இயக்குநர்<br>நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிட்<br>41-B சிட்கோ இண்டஸ்டியல் எஸ்டேட்<br>அம்பத்துார், சென்னை 98 | 5000/- |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் மாநகராட்சிக்கு சொந்தமான பெதஸ்தா வணிக வளாக கடை எண்.27-க்கு திரு.சண்முகசரவணன், மேலாண்மை இயக்குநர் என்பவர் உயந்தபட்ச மாத வாடகையாக ரூ.5000/- எனவும், கடை எண்.28-க்கு திரு.சண்முகசரவணன், மேலாண்மை இயக்குநர் என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.5000/- என கேட்டுள்ளார்.

மேற்படி கடைக்கு தொடர்ச்சியாக பொது ஏலம் கோரப்பட்டும் யாரும் பொது ஏலத்தில் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை. தற்போது மேற்படி கடை எண்.27-க்கு ஒரு ஒப்பந்தப்புள்ளியும் மற்றும் கடை எண்.28-க்கு ஒரு ஒப்பந்தப்புள்ளியும் வரப்பெற்று இரண்டு கடைகளுக்கும் தலா ஒரு கடைக்கு வீதம் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.5000/- என கேட்கப்பட்டுள்ளது. மேற்படி கடை ஏப்ரல் 2018 முதல் தொடர்ந்து பூட்டிய நிலையில் உள்ளதாலும், இக்கடையின் அருகில் உள்ள கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.5000/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாலும், மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டு வருவதாலும் மேற்படி கடை எண் 27-க்கு உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.5000/- மற்றும் கடை எண்.28-க்கு உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.5000/- என திரு.சண்முக சரவணன் என்பவருக்கு கடை உரிமம் வழங்கும் பொருட்டு மன்றம் பரிசீலனை செய்து அங்கீகரிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7841/2017/அ13

**தீர்மானம் எண்.315 - அங்கீகரிக்கப்பட்டது.**

2. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் புதிய கடை எண்.07-க்கு 24.07.2019 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை. எனவே மேற்படி கடைக்கு தொடர்ச்சியாக மறு பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 31.07.2019 அன்று உள்ளூர் விடுமுறை என அறிவிக்கப்பட்டதால் மறு வேலை நாள். 01.08.2019 அன்று மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மேற்படி கடைக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. பொது ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை கீழ்கண்டவாறு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை |
|---|---|---|
| **அண்ணா பேருந்து நிலையம் புதிய கடை எண்.07** | | |
| 1 | திரு.சுவாமிதாஸ்<br>த/பெ சாமுவேல்<br>திடல்<br>கன்னியாகுமரி மாவட்டம் | 21500/- |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் அண்ணா பேருந்து நிலையம் புதிய கடை எண்.07-க்கு உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.21500/- என திரு.சுவாமிதாஸ் என்பவர் கேட்டுள்ளார்.

மேற்படி மாத வாடகையானது முந்தைய உரிமதாரர் அனுபவித்து வந்த மாத வாடகையைவிட கூடுதலாக இருப்பதினாலும் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படாததாலும் கடை எண்.07-க்கு உயர்ந்தபட்ச மாத வாடகை ரூ.21500/- என கோரிய திரு.சுவாமிதாஸ் என்பவருக்கு கடை உரிமம் வழங்கும் பொருட்டு மன்றம் பரிசீலனை செய்து அங்கீகரிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.14389/2018/அ13

**தீர்மானம் எண்.316 - அங்கீகரிக்கப்பட்டது.**

3. இம்மாநகராட்சிக்குட்பட்ட புல எண்.A1/43-12 இல் அமைந்துள்ள அனுமதியற்ற கட்டுமானத்தின் மீது T&CP Act 1971 sec 56&57 இன் கீழ் வழங்கப்பட்ட படிவம் I அறிவிப்பின் மீது உரிமையாளர் உயர்நீதிமன்றத்தில் ஆணையாளர் அவர்களை 3 ஆம் பிரதிவாதியாக்கி வழக்கு W.P (MD) No: 13811/2019 தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் 12.07.2019 இன் தீர்ப்புரையில் கட்டட உரிமையாளர் அரசு செயலர் முன் மேல்முறையீடு செய்துள்ளதால்

மேற்படி மேல்முறையீடு மீது 1ஆம் பிரதிவாதி அரசு செயலர் 12 வார காலத்திற்குள் இறுதி முடிவெடுக்கவும் மேற்படி 12 வார காலத்திற்கு 3 ஆம் பிரதிவாதி ஆணையாளர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் என தீப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கட்டடத்தின் மீதான தொடர் நடவடிக்கையை 12 வார காலத்திற்கு நிலுவையில் வைக்கவும் மேலும் வழக்கில் ஆஜராகி வாதாடிய வகைக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை மாநகராட்சி வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலபாண்டியன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/- வழங்கவும் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.17998/2014/எப்1

**தீர்மானம் எண்.317 - அங்கீகரிக்கப்பட்டது.**

4. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகள் படி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்ய அங்கீகாரத்திற்கு.

| **வ. எண்** | **மதிப்பீடு எண்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1 | 32/2019-20 | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 44, 45 (கிழக்கு மண்டலம்) ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்தல் | 18.40 |
| 2 | 33/2019-20 | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, 2, 16, 17, 18, 19, 20, 21, 22, | 18.40 |

| | | | |
|---|---|---|---|
| | | 23, 38, 39, 40 (மேற்கு மண்டலம்) ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்தல் | |
| 3 | 34/2019 | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, 4, 5, 6, 7, 8, 9, 10, 12, 13, 14, 15, 24 (வடக்கு மண்டலம்) ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்தல். | 18.40 |
| 4 | 35/2019 | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.35, 36, 37, 41, 42, 43, 46, 47, 48, 49, 50, 51, 52 (தெற்கு மண்டலம்) ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்தல் | 18.40 |

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7646/2019/இ3

**தீர்மானம் எண்.318 - அங்கீகரிக்கப்பட்டது.**

5. இம்மாநகராட்சி அனந்தனார் கால்வாய் நீரேற்றம் 120HP, 60HP மின் மோட்டார்கள் பழுதினை சரி செய்து குடிநீர் விநியோகம் தடையில்லாமல் வழங்கிடவும் அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.2,90,000/-க்கும் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7179/2019/இ3

**தீர்மானம் எண்.319 - அங்கீகரிக்கப்பட்டது.**

6. இம்மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேவையான ஆலம் வாங்குவதற்கு 19.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு

| | | |
|---|---|---|
| 1 | M/s.Tamil Nadu Chemical industries | மதிப்பீட்டை விட 3.03% குறைவு |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட குறைவாக M/s.Tamil Nadu Chemical industries நிறுவனம் (-)3.03% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதால், அதனை ஏற்று விநியோக உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

<u>**அலுவலக குறிப்பு**</u> - அங்கீகரிக்கலாம்

மதிப்பீடு எண்.17/2019-20

**தீர்மானம் எண்.320 - அங்கீகரிக்கப்பட்டது.**

7. இம்மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேவையான Hypho Chlornine வாங்குவதற்கு 19.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு

| | | |
|---|---|---|
| 1 | M/s.Sri Senthur Murugan Chemical tech | மதிப்பீட்டை விட 3.10% குறைவு |
| 2 | M/s.Tamil Nadu Chemical industries | மதிப்பீட்டை விட 2.98% குறைவு |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள M/s.Sri Senthur Mutugan Chemical tech நிறுவனம் (-)3.10% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதால், அதனை ஏற்று விநியோக உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

<u>**அலுவலக குறிப்பு**</u> - அங்கீகரிக்கலாம்

மதிப்பீடு எண்.18/2019-20

**தீர்மானம் எண்.321 - அங்கீகரிக்கப்பட்டது.**

8. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018-2019 -ன் கீழ் இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.42, பொன்னப்ப நாடார் காலனி கார்மல் மவுண்ட் ரோடு

ஆர்.சி.கோயில் அருகில் 180 அடி நீளத்தில் கழிவு நீரோடை அமைத்தல் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி திரு.T.சுஜின், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 23.20% குறைவாக கொடுத்துள்ளதை தொடர்ந்து கூடுதல் வைப்பு தொகை ரூ.23200/- செலுத்தி வேலை உத்தரவு பெற்றுக்கொள்ள பலமுறை நேரிலும் 10.06.2019 மற்றும் 08.07.2019 ஆகிய தியதிகளில் அறிவிப்பு அனுப்பியும் மேற்படி ஒப்பந்ததாரர் கூடுதல் வைப்பு தொகை செலுத்தி பணி செய்யாத காரணத்தால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்து L2 ஒப்பந்ததாரர் M/sஅம்பாள் இன்ஸ்ட்ரக்சன் என்பவர் மதிப்பீட்டை விட 17.00% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்கிட அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

மதிப்பீடு எண்.118/2018-19

**தீர்மானம் எண்.322 - அங்கீகரிக்கப்பட்டது.**

9. இம்மாநகராட்சிக்கு சொந்தமான காமராஜர் 5 மாடி கட்டிடத்தில் இரண்டாம் தளம் வடக்கு பக்கத்தில் பெரிய மற்றும் சிறிய அறையினை திரு.S.ராஜசேகர் என்பவர் உரிமம் எடுத்து அனுபவித்து வந்தார். மேற்படி அறையானது 9 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மேற்படி அறைக்கு திரு.S.ராஜசேகர் என்பவர் புதியதாக வைப்புத்தொகை செலுத்தி 01.04.2018 முதல் புதிய உரிமம் எடுத்துள்ளார். எனவே அன்னார் முன்னால் செலுத்திய வைப்புத்தொகை ரூ.1,59,450/- திரும்ப வழங்க 01.03.2019 தேதிய விண்ணப்பம் மூலம் கோரியுள்ளார். அன்னார் பெயரில் தணிக்கை தடை ஏதும் இல்லை மற்றும் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை எனவே திரு.S.ராஜசேகர் என்பவருக்கு அன்னாரின் வைப்புத்தொகை ரூ.1,59,450/- திரும்ப வழங்க அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.02084/2019/அ6

**தீர்மானம் எண்.323 - அங்கீகரிக்கப்பட்டது.**

10. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் DBC பணியாளர்களின் களப்பணியினை அலைபேசி மூலம் கண்காணிக்கவும், நகரமைப்பு பிரிவில் புதிதாக கட்டப்பட்டுவரும் கட்டிடங்களை கண்காணிக்கும் விதமாகவும் செயலி ஒன்றினை நிறுவ 08.08.2019 விலைப்புள்ளி கோரப்பட்டதில் (4) விலைப்புள்ளிகள் வரப்பெற்றன அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | Soft bery Solutions, Karaikudi | 88,500/- |
| 2 | Real Tech Systems, Perundurai | 1,06,200/- |
| 3 | Mobi Tech Perundurai | 1,18,000/- |
| 4 | V Tech Systems, Perundurai | 1,29,800/- |

மேற்படி விலைப்புள்ளிகளில் Softbery Solutions Karaikudi நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவானது

எனவே மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி அவசர அவசியத்தின் பேரில் மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.23313/2012/எச்4

**தீர்மானம் எண்.324 - அங்கீகரிக்கப்பட்டது.**

11. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படியும், Housing and Urban Development (UD413) Department G.O.(MS)No.53 நாள்.16.04.2018-ல் தெரிவித்துள்ளபடியும், இம்மாநகராட்சியில் டெங்க் நோய் ஒழிப்பு பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களை அலைபேசி மூலம் கண்காணிக்கும் வகையிலும், நகரமைப்பு பிரிவில் வரைபடத்தின்படியும், உரிய விதிகளின்படியும் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை கண்காணிக்கும் விதமாகவும், இரண்டு துறையின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து ஒரே ஆப்-ல் நிறுவும் விதமாக (SAKAR) ஆப் நிறுவவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.89,000/-ற்கும் பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும், அவசர அவசியத்தின் பேரில் மன்ற முன் அனுமதி எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியதையும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.23313/2012/எச்4

**தீர்மானம் எண்.325 - அங்கீகரிக்கப்பட்டது.**

12. இம்மாநகராட்சி வார்டு எண்.27 முதல் 52 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறு மின் மோட்டார்கள், ஸ்டாட்டர்கள் மற்றும் இதர மின் சாதனங்களில் ஏற்படும் பழுதினை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் விநியோகம் தடையில்லாமல் வழங்கிட 03.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | A.பாஸ்கரன் | மதிப்பீட்டை விட 2.11% குறைவு |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட குறைவாக A.பாஸ்கரன் ஒப்பந்தக்காரர் (-)2.11% குறைவாக கொடுத்துள்ளதால், அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>** - அங்கீகரிக்கலாம்

மதிப்பீடு எண்.02/2019-20

**தீர்மானம் எண்.326 - அங்கீகரிக்கப்பட்டது.**

13. இம்மாநகராட்சி வார்டு எண்.1 முதல் 26 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறு மின் மோட்டார்கள், ஸ்டாட்டர்கள் மற்றும் இதர மின் சாதனங்களில் ஏற்படும் பழுதினை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் விநியோகம் தடையில்லாமல் வழங்கிட 03.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | A.பாஸ்கரன் | மதிப்பீட்டை விட 2.11% குறைவு |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட குறைவாக A.பாஸ்கரன் ஒப்பந்தக்காரர் (-)2.11% குறைவாக கொடுத்துள்ளதால், அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>** - அங்கீகரிக்கலாம்

மதிப்பீடு எண்.01/2019-20

**தீர்மானம் எண்.327 - அங்கீகரிக்கப்பட்டது.**

14. இம்மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.40, பட்டசாலியன்விளை சிவன்கோயில் அருகில் உள்ள போர்வெல், வார்டு எண்.10 பள்ளத்தெருவில் உள்ள போர்வெல் மற்றும் வார்டு எண்.27 காமராஜபுரம் சர்ச் ரோடு பகுதியில் உள்ள மூன்று போர்வெல்களும் பழுதடைந்துள்ளதால் குடிநீர் அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் ரூ.6,80,000/- மதிப்பீட்டில் மேற்படி பணியினை திரு.T.துரை, ஒப்பந்தகாரர் மூலம் மேற்கொள்ள இருப்பது அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.E3/7642/2019

**தீர்மானம் எண்.328 - அங்கீகரிக்கப்பட்டது.**

15. இம்மாநகராட்சிக்குட்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் Pump House II மோட்டார் பழுதினை சரி செய்யும் பணிக்கு 12.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு

| | | |
|---|---|---|
| 1 | R.அமுதன் | மதிப்பீட்டை விட 0.87% குறைவு |
| 2 | T.திருமலர் முகம் | மதிப்பீட்டை விட 0.32% குறைவு |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. R.அமுதன் மதிப்பீட்டை விட 0.87% குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

மதிப்பீடு எண்.13/2019-20

**தீர்மானம் எண்.329 - அங்கீகரிக்கப்பட்டது.**

16. இம்மாநகராட்சிக்குட்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் III Bed Valve, Air Valve மற்றும் 30HP மோட்டார் பழுதினை சரி செய்யும் பணிக்கு 12.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு

| | | |
|---|---|---|
| 1 | R.அமுதன் | மதிப்பீட்டை விட 1.52% குறைவு |
| 2 | T.திருமலர் முகம் | மதிப்பீட்டை விட 0.65% குறைவு |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. R.அமுதன் மதிப்பீட்டை விட 1.52% குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.11/2019-2020

**தீர்மானம் எண்.330 - அங்கீகரிக்கப்பட்டது.**

17. மாநகராட்சிக்கு சொந்தமான மகாராஜா ஸ்ரீஅவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பகத்தில் பொது நிகழ்ச்சிகள் நடத்திட கடந்த காலத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட நாள் வாடகை மிகவும் குறைவாக உள்ளது. எனவே, எதிர்வரும் காலங்களில் அரசியல் / மதம் தொடர்புடைய நிகழ்ச்சிகளுக்கு நாள் வாடகை ரூ.25,000/- மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தப்படவேண்டும் என்பதுடன் வைப்பு தொகையாக ரூ.10,000/- நிர்ணயம் செய்திட மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

மேலும், சர்க்கஸ் நிகழ்ச்சிக்கு நாள் வாடகையாக ரூ.7,500/- நிர்ணயிப்பதுடன், பொருட்காட்சி உட்பட இதர பொழுது போக்கு அம்சங்களுக்கு குறைந்தபட்சமாக இறுதியாக ஒப்படைக்கப்பட்டதிலிருந்து 5% உயர்வு செய்து ஒப்படைக்கவும், ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் / நிறுவனங்கள் கோரிடும் நிலையில் மேற்படி தொகையினை அரசு மதிப்பாக கொண்டு பொது ஏலம் விட்டு ஒப்படைக்கவும், வைப்பு தொகையாக ஏலத்தில் கலந்து கொள்பவர்களுக்கு ரூ.5.00 லட்சம் நிர்ணயம் செய்திடவும் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.26072/2012/அ8

**தீர்மானம் எண்.331 - அங்கீகரிக்கப்பட்டது.**

18. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38, வலம்புரிவிளை உரக்கிடங்கில் இயங்கி வரும் Bio methavation Plant Gum Power Generation-க்கு தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் CTO அனுமதி 12.03.2016-ல் பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம் - நாகர்கோவில் கடிதம் F-NGL1510/RS/DEE/TNPCB/2019 நாள்.11.03.2019-ல் 31.03.2019 முதல் செலுத்தப்படவேண்டிய நிலுவைத்தொகை ரூ.32,600/- மற்றும் 2019-

2020-ம் ஆண்டிற்கான கேட்புத்தொகை ரூ.32,600/- மற்றும் 2019-2020-ம் ஆண்டிற்க்கான கேட்புத்தொகை ரூ.16,300/- சேர்ந்து மொத்தம் ரூ.97,800/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு ரூ.97,800/-ம் கேட்பு வரைவோலை மூலம் செலுத்தி CTO புதுப்பிக்கும் பொருட்டு அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அ) அங்கீகரிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று புதுபித்தல் கட்டணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதை ஒப்புதல் அளிக்கலாம்.

கோப்பு எண்.5365/2019/எச்1

**தீர்மானம் எண்.332 - அங்கீகரிக்கப்பட்டது.**

19. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.44-ல் ஏசுவடியான் தெரு Green Lane -ல் ஒரு தெருவிளக்கு வார்டு எண்.22-ல் குருகுலம் சாலை தென்றல் நகர் பகுதியில் 4 தெருவிளக்குகள், வார்டு எண். 49-ல் பார்க் ரோடு, நேரு நகரில் 2 தெருவிளக்குகள், வார்டு எண்.16-ல் ராமர்காலனி, ஆறுமுகம் பிள்ளையார் கோவில் தெருக்களில் 10 தெருவிளக்குகள், வார்டு எண்.23-ல் அனந்தன்நகர் சானல்கரை, தென்றல் நகர் பகுதியில் 2 தெருவிளக்குகள் அமைக்கவும் அதற்காகும் செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.4555/2017/இ4

**தீர்மானம் எண்.333 - அங்கீகரிக்கப்பட்டது.**

20. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினமும் சராசரியாக 110 டன்னுக்கும் அதிகமாக குப்பைகள் சேகரமாகின்றன மற்றும் ஓடைகளில் சேகரமாகும் மண் இவைகளை Primary Collection மற்றும் Secondary Collection மூலமாக வாகனங்கள் மூலம் வலம்புரிவிளை குப்பைக்கிடங்கிற்கு கொண்டுபோய் சேர்க்கப்படுகின்றன. இதற்காக பயன்படுத்தப்படும் மாநகராட்சிக்கு சொந்தமான Heavy Vehicle லாரிகள்

பெரும்பான்மையானவை 10 ஆண்டுகளை கடந்துள்ளதாலும் கடுமையான பராமரிப்பு செலவினங்களை ஏற்படுத்துவதாலும் மேற்படி வாகனங்களை கழிவு செய்தல் மற்றும் 10 ஆண்டுகளுக்குட்பட்ட dumper Placer வாகனங்களை மாற்றியமைத்தல் (Alteration) போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மீதமுள்ள இம்மாநகராட்சி வாகனங்களான 25 ஆட்டோ மற்றும் 2 Compactor Lorry ஆகியவைகளை பயன்படுத்தி 53% குப்பைகள் அகற்றப்பட்டு வந்த காரணத்தால் தனியார் நிறுவனம் மூலம் வாடகைக்கு (Tempo 10, Auto 15) அமர்த்தி குப்பைகளை அகற்றும் பணி மேற்க்கொள்ளப்பட்டு வந்தது. மேலும் வலம்புரிவிளை குப்பை கிடங்கில் மலைபோல தேங்கியுள்ள குப்பைகளை கிட்டாச்சி இயந்திரம் மூலம் உடனுக்குடன் அகற்றினால் மட்டுமே மேற்படி பகுதிகளில் குப்பைகளை கொட்டமுடியும் என்பதாலும் இரண்டு கிட்டாட்சி இயந்திரங்கள் வாடகைக்கு எடுத்து பயன்படுத்தப்பட்டு வந்தது. இம்மாநகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டம் மூலம் மேலும் கூடுதல் வாகனங்கள் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளதால் சம்மந்தப்பட்ட வாகனங்கள் வரும் வரைக்கும் அல்லது ஓராண்டு காலத்திற்கு மேற்படி வாகனங்கள் அவசியம் தேவை என துப்புரவு ஆய்வர்கள் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.290 லட்சத்திற்கும் பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அங்கீகாரத்திற்கு. மேலும் அவசர அவசியத்தின் பேரில் மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.9926/2018/எச்2

**தீர்மானம் எண்.334 - அங்கீகரிக்கப்பட்டது.**

21. இம்மாநகராட்சிக்குட்பட்ட நகரின் முக்கிய பிரதான சாலைகளின் நுழைவு வாயிலில் வரவேற்பு மற்றும் எல்லை பேர்டுகள் அமைக்கவும், பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் எளிதாக செல்லும் வகையில் எல்லை Signage மற்றும் Road Signage `N` Type Board TANSI நிறுவனம் மூலம் அமைத்திடவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.8178/2019/இ1

**தீர்மானம் எண்.335 - அங்கீகரிக்கப்பட்டது.**

22. நாகர்கோவில் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை அடுத்து நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி பெயர் பலகை மற்றும் அலுவலர் குடியிருப்பில் உள்ள பெயர் பலகைகள் பெயர் மாற்றம் செய்யவும் (மாநகராட்சி என) பழைய போர்டுகளுக்கு புதிதாக வர்ணம் தீட்டி பெயர் பதிக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.84,000/- (ரூ.எண்பத்தி நான்காயிரம்)-க்கு அனுமதியும் பணியின் அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் விதி எண்.1920 பிரிவு 15-ன் கீழ் மேற்படி பணியினை திரு.S.சந்தணகுமார் என்பவர் மூலம் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7953/2019/இ1

**தீர்மானம் எண்.336 - அங்கீகரிக்கப்பட்டது.**

23. இம்மாநகராட்சியில் பணிபுரிந்த முன்னாள் பொறியாளர் திரு.D.சுரேஷ் என்பவருக்கு கட்டாய விருப்ப ஓய்வு வழங்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.15360/2019 படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி இம்மாநகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராக வழக்கினை திரு.ஆனந்த் வழக்கறிஞர் சென்னை நடத்திடவும் மேற்படி வழக்கிற்கான செலவினத்திற்க்கும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6107/2019/இ1

**தீர்மானம் எண்.337 - அங்கீகரிக்கப்பட்டது.**

24. கன்னியாகுமரி மாவட்ட திட்ட அலுவலக ந.க.எண்.1746/அ3/2018, நாள். 06.08.2019-ன் படி, இம்மாநகராட்சிக்குட்பட்ட கட்டையன்விளை மற்றும் பட்டகசாலியன்விளை ஆகிய இரண்டு அங்கன்வாடி மையங்களை தரம் உயர்த்திட ரூ.2.00 லட்சம் வீதம் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மேற்படி மையங்கள் ஆய்வு செய்யப்பட்டு கடிதத்தில் தெரிவித்துள்ள பணிகள் மேற்கொள்ள

ரூ.4,50,000/- மற்றும் ரூ.5,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே அனுமதிக்கப்பட்ட செலவினத்தை விட கூடுதலாகும் செலவினம் ரூ.5,50,000/-க்கு அனுமதியும், மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.8256/2019/இ1

**தீர்மானம் எண்.338 - அங்கீகரிக்கப்பட்டது.**

25. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38-ல் வட்டவிளை வேதநகர் சாலையில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் கவர்சிலாப் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,25,000/-க்கு (இரண்டு லட்சத்தி இருபத்தைந்தாயிரம்) அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.8459/2019/இ1

**தீர்மானம் எண்.339 - அங்கீகரிக்கப்பட்டது.**

26. இம்மாநகராட்சியில் பணிபுரிந்த முன்னாள் பொது பணி மேற்பார்வையாளர் திரு.R.செல்வமணி என்பவருக்கு கட்டாய விருப்ப ஓய்வு வழங்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP(MD)11719/2019 படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் மாநகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகி வழக்கினை திரு.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் நடத்திடவும் அதற்கான செலவினத்திற்க்கும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5649/2019/இ1

**தீர்மானம் எண்.340 - அங்கீகரிக்கப்பட்டது.**

27. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான மகாராஜா ஸ்ரீ அவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பக மைதானத்தில் தென்மேற்கு பகுதியில் நிறுத்தப்படும் லாறிகளிடம் நாள் ஒன்றுக்கு ரூ.30/- வீதம் கட்டணம் வசூல் செய்திடும் உரிமம் 2018-2019-ம் ஆண்டு திரு.P.குமரேசன், கன்னியாகுமரி மாவட்ட லாறி உரிமையாளர்கள் சங்கம், நாகர்கோவில் என்பவருக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்தது. தற்போது மேற்படி இடம் மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கு தேவைப்படுவதால் மேற்படி உரிம

இனம் 2019-2020-ம் நிதியாண்டிற்கு ஏல அறிக்கையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து மைதானத்தினை காலி செய்து மாநகராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டதை எதிர்த்து திரு.P.குமரேசன் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் WP(MD) No.16071/2019 வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை மதுரை உயர்நீதிமன்றக்கிளை வழக்குறைஞர் திரு.P.ஆதிமூலபாண்டியன் மூலம் நடத்திடவும், அதற்கு உண்டான வழக்கு செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1266/2017/அ8

**தீர்மானம் எண்.341 - அங்கீகரிக்கப்பட்டது.**

28. இம்மாநகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையில் இருந்து தலைமை நீரேற்று நிலையம் வரை தண்ணீர் கொண்டு வரும் 800mm பிரதான குழாயில் கீழ்கண்ட இடங்களில் பழுதுகள் ஏற்பட்டு தண்ணீர் விரயமாகிறது.

1. அணை செல்லும் சாலை 14/714 மின்வாரிய அலுவலகம் அருகில்
2. அரசன் குழி
3. ஈசாந்தி மங்கலம் கோயில்
4. ஈசாந்தி மங்கலம் சுகாதார அலுவலகம்
5. நாவல்காடு
6. மாடன்கோயில் 1
7. மாடன் கோயில் 2
8. மாடன் கோயில் 3

மேற்படி பழுதுகளை சரி செய்ய ரூ.4,17,000/- மதிப்பீட்டில் குடிநீர் முக்கியத்துவம் அடிப்படையில் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் மேற்படி பணியினை திரு.A.M.Batric Ignesious, என்பவர் மூலம் மேற்கொள்ள இருப்பது பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.30/2019/2020

**தீர்மானம் எண்.342 - அங்கீகரிக்கப்பட்டது.**

29. இம்மாநகராட்சி கணனி பிரிவில் உள்ள கணனிகளுக்கு தேவையான Tonner-கள் வாங்க 19.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | Apex Enterprises, Mumbai | மதிப்பீட்டை விட 59.21% குறைவு |
| 2 | MD Computer Nx, Mumbai | மதிப்பீட்டை விட 42.69% குறைவு |
| 3 | Bahuchar Traders, Mumbai | மதிப்பீட்டை விட 37.16% குறைவு |
| 4 | Lakshmi Cartrides, Bangalore | மதிப்பீட்டை விட 19.75% குறைவு |
| 5 | Reliable office suppliers | மதிப்பீட்டை விட 16.16% அதிகம் |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி Apex Enterprises, Mumbai அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.15957/2019/இ3

**தீர்மானம் எண்.343 - அங்கீகரிக்கப்பட்டது.**

30. இம்மாநகராட்சிக்கு சொந்தமான மரங்களின் மேலாதாயம் அனுபவிக்கும் 2019-2020-ம் ஆண்டிற்கான உரிமம் இனத்திற்கு வேண்டி ஏல / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து 06.02.2019 மற்றும் 18.02.2019 முதல் தொடர்ச்சியாக 03.07.2019, 10.07.2019, 17.07.2019, 24.07.2019, 31.07.2019 வரை பலமுறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் 07.08.2019-ம் தேதிய ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் T.இராஜன், என்பவர் மட்டும் ரூ.40,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியானது கடந்த மூன்றாண்டு சராசரி உரிமத்தொகை ரூ.32,576/- மற்றும் கடந்த வருட உரிமத்தொகை ரூ.34,178/-ஐ விடவும் கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம் வழங்கிட அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1266/2017/அ8

**தீர்மானம் எண்.344 - அங்கீகரிக்கப்பட்டது.**

31. இம்மாநகராட்சிக்கு சொந்தமான மகாராஜா ஸ்ரீ அவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பக மைதானத்தில் தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு பட்டாசு விற்பனை செய்திடும் கடைகள் நடத்திட 2016-2017 -ம் ஆண்டு ஏல அறிக்கையில் கண்ட பொது மற்றும் சிறப்பு நிபந்தனைக்குட்பட்டு மற்றும் அதற்கென உருவாக்கப்பட்ட பிரத்யேக நிபந்தனைகளுக்குட்பட்ட பொது ஏல நடவடிக்கைக்குட்படுத்திட ஒப்பந்தப்புள்ளிகள் கோரிட அனுமதிக்கும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு வழி விளம்பரம் செய்து பொது ஏலம் நடவடிக்கைக்கு உட்படுத்தவும் அதற்குண்டான விளம்பர செலவினங்களுக்கு மன்ற அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 26072/2012/அ8

**தீர்மானம் எண்.345 - அங்கீகரிக்கப்பட்டது.**

32. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டு செயல்பாட்டிற்கு வரப்பெற்றுள்ள MCC Plant -ல் துப்புரவு பணியாளர்களால் வீடு தோறும் சேகரிக்கும் மட்கும் குப்பைகளை பிரித்து, அதனை அரைத்து EM Solution தெளித்து உரமாக்கப்படுகிறது. இந்நிலையில் EM Solution -ல் உள்ள கரும்பு சக்கரை இனிப்பு காரணமாக குப்பைகளில் ஈக்கள் முட்டையிட்டு அதிக அளவில் உற்பத்தி ஆகின்றன. இந்நிலையில் அருகில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் ஈக்கள் மூலம் பொது சுகாதார பிரச்சனை மற்றும் தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளது. எனவே, அதனை கட்டுப்படுத்தும் பொருட்டு உயிரியல் ஒட்டுண்ணி (Tetrastichus Howardi) அவசர அவசியமாக வாங்கும் பொருட்டு 14.08.2019-ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. | சப்ளை செய்யும் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|

| எண் | நிறுவனத்தின் பெயர் | |
|---|---|---|
| 1 | M/s. S.R.K. Seri Bio Control Unit Hosur - 635103 | லிட்டர் ஒன்றுக்கு ரூ.3250/- |
| 2 | M/s. Anjeneya Bio Tech, Vaniyamabadi - 635851 | லிட்டர் ஒன்றுக்கு ரூ.3500/- |
| 3 | M/s. Ranjith Bio Tech, 13/36- Shanthi Nagar, Hosur- 635109 | லிட்டர் ஒன்றுக்கு ரூ.3425/- |

மேற்கண்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள விலைப்புள்ளி லிட்டர் ஒன்றுக்கு ரூ.3250/- என குறைவாக வரப்பெற்றுள்ளது. எனவே, தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுக்கு அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு -1. அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

2. வரிசை எண்.1ல் கண்டுள்ள M/s. S.R.K. Seri Bio Control Unit நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளதால், மேற்படி நிறுவனத்திற்கு அவசர அவசியம் கருதி 300 லிட்டர் உயிரியல் ஒட்டுண்ணி (Tetrastichus Howardi) வினியோகம் செய்ய உத்தரவு வழங்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.8343/2019/எச்1

**தீர்மானம் எண்.346 - அங்கீகரிக்கப்பட்டது.**

33. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான சரலூர் மீன் சந்தையினுள் புதியதாக கட்டப்பட்டுள்ள 1 முதல்16 கடைகளுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 07-08-2019 புதன்கிழமை அன்று பொது ஏலத்தில் கலந்து கொள்ள குத்தகைதாரர்கள் வந்திருந்தனர். அன்றை தினம் நடைபெற இருந்து பொது ஏலத்தினை நிர்வாக நலன் கருதி

மறு நாள் 08-08-2019 வியாழக்கிழமை அன்று மாநகராட்சி ஆணையர் அவர்களால் ஒத்தி வைக்கப்பட்டது.

08-08-2019 அன்று நடைபெற்ற மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் கீழ்கண்டவாறு மன்ற அங்கீகாரத்திற்கு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | கடை எண் | பொது ஏலம் நடவடிக்கை | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 01 | திரு. பத்ம செந்தில் நாகர்கோவில் | **01** | 4600/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை |
| 02 | திரு. கிரிபியான் ஜோஸ் த/பெ சஞ்சோரிஸ் 13/129 றைஸ்மில் தெரு, மேல பெருவிளை | **02** | 4600/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை |
| 03 | திரு. மீராசா 7/99F முகம்மது கார்டன்,திட்டுவிளை | **03** | 4600/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை |
| 04 | திரு. மணிகண்டன் 8/74 புது கிராமம் தேரூர் | **04** | 4600/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை |
| 05 | திருமதி. P. விஜய லெட்சுமி பீச்ரோடு, நாகர்கோவில் | **05** | 6000/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை |
| 06 | திரு. J. அருண்குமார் மேல இராமன்புதூர் நாகர்கோவில் | **06** | 4600/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை |
| 07 | திரு. சதீஷ்குமார் கோட்டார் | **07** | 4600/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | நாகர்கோவில் | | | கொள்ளவில்லை |
| 08 | திரு. சுரேஷ்<br>பீச்ரோடு<br>நாகர்கோவில் | **08** | 4000/- | ஒப்பந்தப்புள்ளியில்<br>கலந்து<br>கொள்ளவில்லை |
| 09 | திரு. இசக்கிராஜ்<br>அருகுவிளை<br>நாகர்கோவில் | **09** | 4600/- | ஒப்பந்தப்புள்ளியில்<br>கலந்து<br>கொள்ளவில்லை |
| 10 | திரு. லாறன்ஸ்<br>கோட்டார்<br>நாகர்கோவில் | **10** | 4600/- | ஒப்பந்தப்புள்ளியில்<br>கலந்து<br>கொள்ளவில்லை |
| 11 | திரு. சாஜின்<br>சுசீந்திரம்<br>கன்னியாகுமரி<br>மாவட்டம் | **11** | 4600/- | ஒப்பந்தப்புள்ளியில்<br>கலந்து<br>கொள்ளவில்லை |
| 12 | திரு. A. ஜெயபாலன்<br>கோயிலடிவிளை<br>நாகர்கோவில் | **12** | 4700/- | ஒப்பந்தப்புள்ளியில்<br>கலந்து<br>கொள்ளவில்லை |
| 13 | திரு. M. அபுபக்கர்<br>ஆஸாத் நகர்<br>திட்டுவிளை | **13** | 4600/- | ஒப்பந்தப்புள்ளியில்<br>கலந்து<br>கொள்ளவில்லை |
| 14 | திரு. டேனியல்<br>ஜெயசிங்<br>28/B ஐசக் தெரு<br>நாகர்கோவில் | **14** | 4600/- | ஒப்பந்தப்புள்ளியில்<br>கலந்து<br>கொள்ளவில்லை |
| 15 | திரு. ஜேசப்<br>ஜெயசீலன்<br>150, கோல்டன் தெரு<br>சற்குண வீதி<br>நாகர்கோவில் | **15** | 4600/- | ஒப்பந்தப்புள்ளியில்<br>கலந்து<br>கொள்ளவில்லை |
| 16 | St. Peter & Pual<br>11A New Thiruvalluvar Nager<br>Kasimedu, Rayapuram | **16** | 5000/- | ஒப்பந்தப்புள்ளியில்<br>கலந்து<br>கொள்ளவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | Chennai | | | |

மேற்காணும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் 1 முதல் 16 வரையிலான கடைகளுக்கு உயர்ந்தபட்ச மாத வாடகை கோரியவர்களுக்கு கடை உரிமத்தினை ஒப்படைக்கும் பொருட்டு மன்றம் பரிசீலனை செய்து அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.00731/2019/அ6

**தீர்மானம் எண்.347 - அங்கீகரிக்கப்பட்டது.**

34. இம்மாநகராட்சிக்குட்பட்ட கோட்டார் ரயில்வே பீடர் சாலையில் உள்ள குறுகலான பாலத்தினை விரிவுபடுத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,80,000/-க்கு அனுமதியும், மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.8456/2019/இ1

**தீர்மானம் எண்.348 - அங்கீகரிக்கப்பட்டது.**

35. இம்மாநகராட்சிக்குட்பட்ட கோட்டார் ரயில்வே பீடர் சாலையில் தார்தளம் அமைத்தல் வேலைக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.15,00,000/-க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.8457/2019/இ1

**தீர்மானம் எண்.349 - அங்கீகரிக்கப்பட்டது.**

36. இம்மாநகராட்சிக்குட்பட்ட ஒழுகினசேரி பாலம் முதல் ஆராட்டு ரோடு செல்லும் சாலையில் தார்சாலை அமைத்தல் மற்றும் கட்டையன்விளை பகுதியில் "No Vending Zone" அறிவிப்பு பலகை நிறுவிடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை

ரூ.4,00,000/-க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.8460/2019/இ1

**தீர்மானம் எண்.350 - அங்கீகரிக்கப்பட்டது.**

37. இம்மாநகராட்சியில் கீழ்கண்ட வேலைகளுக்கு பில்லில் பிடித்தம் செய்த 5% கூடுதல் காப்பீடுத்தொகைகள், காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கில் உள்ளதால் இத்தொகைகளை திரும்ப வழங்க அங்கீகாரத்திற்காக.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீடு எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | P.ரமேஷ் (Late) | 132/13-14 | 46,388/- |
| 2 | P.ரமேஷ் (Late) | 216/13-14 | 25,927/- |
| 3 | P.ரமேஷ் (Late) | 215/13-14 | 39,500/- |
| 4 | P.ரமேஷ் (Late) | 214/13-14 | 23,301/- |
| | | **மொத்தம்** | **135116/-** |

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1191/2018/இ1

**தீர்மானம் எண்.351 - அங்கீகரிக்கப்பட்டது.**

38. நகர்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் ஆயத்தபணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் 21.06.2019 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி தலைவர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் பங்கேற்ற மாவட்ட அலுவலர்களுக்கு தேநீர் மற்றும் இனிப்பு வகைகள் வழங்கியதற்கான தொகை ரூ.4969/- இம்மாநகராட்சி அலுவலக உதவியாளர் திரு.D.ஆசீர் சேம் என்பவரால் செலவிட்டதற்கு மேற்படி தொகை வழங்கக் கோரியுள்ளதன்படி, ரூ.4969/- திரு.D.ஆசீர்

சேம் என்பவருக்கு வழங்குவதற்கும், உள்ளாட்சி தேர்தல் 2019-ற்கு வாக்கு சாவடிகளின் பட்டியல் 42 பக்கங்கள் வீதம் மொத்தம் 100 வாக்கு சாவடிகள் பட்டியல் பிரிண்டிங் மற்றும் கட்டுகள் செய்து வழங்கிய வகைக்காக ரூ.3382/- ஹமீதின் பிரிண்டர்ஸ், மதுரை நிறுவனத்திற்கு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - 1. அனுமதிக்கலாம்

2. ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1300/2019/அ1

**தீர்மானம் எண்.352 - அங்கீகரிக்கப்பட்டது.**

39. இம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் வீடு, விடாக சென்று குப்பைகளை சேகரிப்பதற்கு பேட்டரியால் இயங்கும் (BOV) 30 வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. மேற்படி வாகனங்களின் பயன்பாடு ஈராண்டை கடந்துள்ள நிலையில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு வருகின்றன. மேற்படி வாகனங்கள் (Tricycle) அத்யாவிசியப் பணிகளில் ஈடுபட்டு வருவதால் உடனுக்குடன் சரி செய்யும்விதமாக பராமரிப்பு பணிகள் (AMC) மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் (ROC No: 2286/P3/2019 நாள். 26.02.2019) தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் அவசர அவசியம் கருதி 27.08.2019-ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் (4) விலைப்புள்ளிகள் பெறப்பட்டன அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1 | Softbery Solutions, Karaikudi | : | 6,37,200.00 |
| 2 | RealTech Systems, Perundurai | : | 7,43,400.00 |
| 3 | VTS Systems, Perundurai | : | 8,49,600.00 |
| 4 | Mobitech Solutions | : | 9,55,800.00 |

இதில் வரிசை எண்.(1) -ல் கண்ட Softbery Solutions, Karaikudi நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவானது (6 மாத காலத்திற்கு) என்பதால் அவசர அவசியத்தை முன்னிட்டு மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியையதையும் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.12405/2018/எச்2

**தீர்மானம் எண்.353 - அங்கீகரிக்கப்பட்டது.**

40. இம்மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் மற்றும் தெருவிளக்கு புகார்களை தெரிவிக்க தினகரன் நாளிதழிளில் விளம்பரம் அறிவிப்பு செய்தவைக்கு செலவினம் தொகை ரூ.6250/-க்கு அங்கீகாரத்திற்காக..

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.19803/2012/இ2

**தீர்மானம் எண்.354 - அங்கீகரிக்கப்பட்டது.**

41. இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN74E6583-ற்கு செல்ப் மோட்டார், ஆயில் சர்வீஸ் செய்தல், டோர் கைப்பிடி மற்றும் பழுது பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் தொகை ரூ.6000/-க்கு ஆகும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.10355/2007/இ2

**தீர்மானம் எண்.355 - அங்கீகரிக்கப்பட்டது.**

42. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2018-2019-ன் கீழ் வார்டு எண்.39, மறவன் குடியிருப்பு முன்பு செல்லும் சாலையில் அலங்கார தடை ஓடு அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ3/4041/2018, நாள். .07.2019-ன் படி நிர்வாக அனுமதி

வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 14.08.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.வைகுண்டராஜன் V.N.Construction | மதிப்பீட்டை விட 19.03% குறைவு |
| 2 | திரு.T.நாகரெத்தினம் | மதிப்பீட்டை விட 16.00% குறைவு |
| 3 | திரு.R.விஜயகுமார் | மதிப்பீட்டை விட 15.48% குறைவு |

பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.வைகுண்டராஜன், V.N.Construction என்பவர் மதிப்பீட்டை விட 19.03% குறைவாக கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத்தொகை ரூ.9520/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.22/2019-2020

**தீர்மானம் எண்.356 - அங்கீகரிக்கப்பட்டது.**

